முதன்மை சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

OS.No.141/2014 பெயர் : சத்யவாணி நாள் : 18.04.2026

வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.1 : 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

தாவா சொத்தில் எனக்கும், பிரதிவாதிகளுக்கும் உரிமையான குடும்ப சொத்து என்றால், சரிதான். எனக்கும், பிரதிவாதிகளுக்கும் ஏற்பட்ட குடும்ப பிரச்சனை காரணமாக தான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். பிரதிவாதிகள் முறையாக விசாரணை மேற்கொண்ட பிறகுதான், 1-ம் பிரதிவாதியின் பெயருக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது என்றால், சரியல்ல. நான் கொடுத்த அறிவிப்பிற்கு 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் பதில் அறிவிப்பு கொடுக்கப்பட்டு, முறையாக காலஅவகாசம் கொடுத்த பின்னிட்டுதான், 1-ம் பிரதிவாதியின் பெயருக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது என்றால், சரியல்ல. மேலும் மின் இணைப்பு வழங்கும் போது, 4,5 பிரதிவாதிகளுக்கு எதிராக எந்தவொரு தடை உத்தரவும் இல்லை என்று சொன்னால், சரியல்ல. இந்த பிரதிவாதிகள் நான் கூறுவது போல் எந்த சட்ட விதிமீறல்களையும் செய்யவில்லை என்றால், சரியல்ல. வழக்கில் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பை இந்த பிரதிவாதிகள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்றால், சரிதான்.